1984 பிப்ரவரி 17]

தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.

* 8. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறில் சோழன் போக்குவரத்துக் கழகப் பணிமனை ஒன்றினை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய் வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அதைப் போல பணிமனை இல்லாத பகுதி களில் புதிய பேருந்துகள் விடவும், பணிமனைகள் இருக்கும் இடங்களில், புதிய பேருந்துகள் இருந்தாலும், ரிப்போர் செய்யப்பட வேண்டும் என்ற அடிப் படையில் புதிய பேருந்துகளை விடுகிற யோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பணிமனை இல்லாத பகுதி என்று சொல்ல முடியாது. எங்கெங்கே பணிமனை இல்லையோ அங்குள்ள பேருந்துகள் பக்கத்திலே உள்ள பணிமனைகளுக்கு பராமரிப்புக்காகச் செல்கின்றன. எல்லா வண்டிகளும் பணிமனையைத் தொட்டுச் செல்ல வேண்டிய வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்டுதல்.

* 9. வினா—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. செ. முத்துசாமி சார்பில்) : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற் குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காவிரியின் வெள்ள நீரை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல, கொடுமுடியிலிருந்து வாய்க்கால் வெட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மழைக் காலங்களில் காவிரியில் கிடைக்கும் வெள்ள நீரை வீணாக்காமல் பயனுள்ள வகையில் உபயோகப் படுத்துவது குறித்த முன்னோடி அறிக்கை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.